දුරකථන:
தொலைபேசி
Telephone:

සභාපති
தலைவர்
Chairman: (+94) 011 2556840

ලේකම්
செயலாளர்:
Secretary: (+94) 011 2556831

කාර්යාලය
காரியாலயம்
Office: (+94) 0112556834
0113071324

ෆැක්ස්:
தொ.நகல
Fax ( +94) 011 2556836
011 2556837

විද්‍යුත් තැපැල
மின்னஞ்சல்:
e-mail fincom@sltnet.lk


# මුදල් කොමිෂන්සභාව

( ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154'ජ' ව්‍යවස්ථාව යටතේපිහිටුවන ලදී.)

# நிதிஆணைக்குழு

(அரசியலமைப்பின் 154`ஏ ஆம்உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டது)

# FINANCE COMMISSION

(Established under Article 154 R of the Constitution)


48, වජිර පාර,
කොළඹ 04.

48, வஜிராவீதி,

கொழும்பு-04, இலங்கை.

48, Vajira Road,
Colombo 04, Sri Lanka.


මගේ අංක
எனது இல:
My No FC/3/2/2017- i

ඔබේ අංක
உமது இல:
Your No

දිනය
திகதி:
Date: 2016.12.07

*பிரதம செயலாளர்*
*மேற்கு, மத்திய, தெற்கு, வடக்கு, வட-மேல், வட-மத்திய, ஊவா, சப்ரகமுவ, மற்றும் கிழக்கு மாகாண சபைகள்*

*அன்புள்ள பிரதம செயலாளர் அவர்களே,*

***<u>மாகாணத்திற்குரிய வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் – 2017</u>***

2017 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வெளிநாட்டு நிதிபெறும் செயற்றிட்டங்கள் உட்பட, மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி கொடைகளின் கீழும் (PSDG), அடிப்படை சார்ந்த மானியங்களின் கீழும் (CBG) உங்களது மாகாணத்திற்காகப் பகிரப்படும் மூலதன நிதி இத்துடன் அனுப்பப்படுகின்றது.

“ளுனுபு யின் கீழ் உங்களது மாகாணத்திற்குரிய 2017 இன் அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்கும்போது, பின்வரும் விடயங்களுக்கு உங்களது உரிய கவனத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

### 01. அரசாங்க அபிவிருத்திக் கொள்கை

தேசிய அரசாங்க ஒருமைப்பாட்டு தொலைநோக்கானது, 2020 ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தை மேல் நடுத்தர வருமான நிலைமைக்கு உயர்த்துவதேயாகும். இந்தத் தொலைநோக்கைச் செயற்படுத்துவதற்காக, அரசாங்கம், உயர் வளர்ச்சி மற்றும் சமூகரீதியான சமத்துவத்தை ஊக்குவித்தல் ஆகிய இரட்டைக் குறிக்கோள்களைச் சார்ந்துள்ள “சமூகச் சந்தை”க் கருதுகோளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார உபாயத்தைக் கைக்கொள்கிறது. இவ்வாறான நிலைமையில், மத்திய கால பெரும்பொருளாதார இலக்குகளை அடைவதில், பின்வரும் ஐந்து விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

- பத்து இலட்சம் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்
- மக்களின் வருமான மட்டத்தை உயர்த்துதல்
- கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்

- காணி உடைமைகளை, குறிப்பாக கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில், உறுதிப்படுத்துதல்
- பரந்த மற்றும் பலமான மத்தியதர வகுப்பினரை உருவாக்குதல்

இவ்வாறான சந்தர்ப்பத்தில், பின்வருவனவற்றினூடாக மாகாணங்கள் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன:

- உலகச் சந்தை நிலைமையை எதிர்கொள்வதற்காக, பெரிய மற்றும் சிறிய மட்ட தொழில் முயற்சியாளர்களையும் விவசாயிகளையும் ஊக்குப்படுத்துதல்
- மாகாண மட்டத்தில் உணவுப்பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தலும் விவசாயிகளின் முக்கியமான பிரச்சினைகளைக் கையாளுதலும்
- கிராமிய உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்
- பத்து இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பங்களித்தல்
- பொருளாதார முயற்சியாளர்களது திறன்களை மேம்படுத்துவதனூடாக சிறிய மற்றும் நடுத்தரப் பொருளாதார முயற்சிகளை (SME) ஊக்குவித்தல்
- தேவையான வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதனூடாக, சுற்றுலாக் கைத்தொழிலை ஊக்குவித்தல்
- நாட்டினது மனித வள மேம்பாட்டை நோக்காகக் கொண்டு, கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- வறுமைக்குட்பட்ட குடும்பங்களைக் கவனத்திற்கொண்டு, வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

**02. ஜனாதிபதி செயலகத்தால் ஒன்றிணைக்கப்படும் தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள்**

ஜனாதிபதி செயலகத்தால் ஒன்றிணைக்கப்படும் பின்வரும் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறுகளை அடைவதற்காகப் பங்களிப்புச் செய்யும் விதத்தில் தமது அபிவிருத்தித் திட்டங்களை மாகாணங்கள் தயாரித்தல் வேண்டும்.

- தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்
- தேசிய சுற்றுச்சூழல் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் (பச்சை அபிவிருத்தி)
- தேசிய போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்
- தேசிய சிறுநீரக வியாதி தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

**03. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

ஐக்கிய நாடுகள் சபையின் 70 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDGs) அடைவதில் கையொப்பமிட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். 17 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களும் 169 இலக்குகளும் உள்ளன. மாகாண அபிவிருத்திக்குரிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- 2030 ஆம் ஆண்டளவில் வறுமையை அதன் சகல வடிவங்களிலிருந்தும் ஒழித்தல்
- 2030 ஆம் ஆண்டளவில் பட்டினி மற்றும் போஷாக்கின்மையை அதன் சகல வடிவங்களிலிருந்தும் ஒழித்தல்

- எயிட்ஸ், சயரோகம், மலேரியா மற்றும் ஏனைய தொற்றும் நோய்களை 2030 ஆம் ஆண்டளவில் ஒழிப்பதற்கு அர்ப்பணிப்பதுடன், சகலரதும் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்துதல்
- 2030 ஆம் ஆண்டளவில் சகல பையன்களும் சிறுமிகளும் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை இலவசமாகப் பெறுவதை உறுதிப்படுத்துதல்
- 2030 ஆம் ஆண்டளவில் சுத்தமானதும் மலிவானதுமான குடிநீரை உலகளாவியரீதியில் கிடைப்பதை உறுதிப்படுத்துதல்
- 2030 ஆம் ஆண்டளவில் உலகளாவியரீதியில் மின்சாரம் கிடைப்பதை நிச்சயப்படுத்துதல்
- வருமானம் ஈட்டுவோரில் ஆகவும் கீழேயுள்ள சதவீதத்தினருக்கு உரமூட்டுவதற்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்துதலும் பால், சாதி, இன வேறுபாடின்றி எல்லோரையும் பொருளாதர வளப்படுத்துதலும்
- 2030 ஆம் ஆண்டளவில் புவிக்குரிய சுற்றுச்சூழலை, அதாவது வனங்கள், ஈர நிலங்கள், காய்ந்த நிலங்கள், மலைகள் ஆகியவற்றின் உபயோகத்தை மீளமைத்து அதனைப் பேணுதல்.
- நிலைபேறான அபிவிருத்திக்காக, அமைதியானதும் சகலருக்கும் நன்மைபயக்கத்தக்க விதத்திலும் சமூகங்களை உயர்த்துவதற்காக அர்ப்பணிப்புச் செய்தல், எல்லோருக்கும் நீதிக்கான அணுகுகையை வழங்குதல், எல்லா மட்டங்களிலும் பொறுப்புக்கூறத்தக்க நிறுவனங்களை உருவாக்குதல்.

**2017 வரவுசெலவுத்திட்ட உரையின் முக்கிய பகுதிகள்**

(அ) பொதுவான தன்மைகள்

i. 2017 வரவுசெலவுத் திட்டத்தின் பரந்த தன்மையானது “சகலருக்கும் நன்மைபயக்கும் துரிதப்படுத்தப்பட்ட வளர்ச்சி” என்பதாகும்.
ii. 2017 ஆம் ஆண்டினை வறுமை ஒழிப்புக்கான வருடம் எனப் பிரகடனப்படுத்தியமையை உறுதிப்படுத்தக்கூடியவாறு வறியவர்களை மையப்படுத்திய கொள்கைகளுக்கு வசதியளித்தல்.
iii. பசுமை மற்றும் புத்தாக்கம் சார்ந்த பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்பவதற்கான தேசிய அபிவிருத்தி உபாயமொன்றுடனான இணக்கம்
iv. உட்கட்டமைப்பு, சட்ட மற்றும் நிருவாகம்சார் உதவிகளை வழங்கி, வளர்ச்சியின் இயந்திரம் என்ற வகையில் தனியார்துறையைப் போஷித்து வளர்த்தெடுத்தல்
v. எண்ணியல் பொருளாதாரம், சுற்றுலாத்துறை, வர்த்தகரீதியிலான விவசாயம் மற்றும் கைத்தொழில் மயமாக்கல் ஆகியவற்றுக்கு பொது மற்றும் தனியார் முதலீடுகளை மையப்படுத்தி ஊக்குவித்தல்

**(ஆ) துறைசார் முன்னுரிமைகள்**

(i) விவசாயம்

- குறைந்த விளைச்சல், குறைந்த வருமானம், சில பயிர்களில் மாத்திரம் தங்கியிருக்கும் நிலை என்பவற்றிலிருந்து வர்த்தகரீதியலான, அதிக வருமானமீட்டும், ஏற்றுமதி சார்ந்த ஒன்றாக விவசாயத்துறையை மாற்றுதல்
- அதிக பேரம்பேசும் சக்தியுடையோராக விவசாயிகளை மாற்றுவதற்கு விவசாயக் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்குதல்

- பெறுமதிச் சங்கிலியை ஒருங்கிணைப்பதற்கு வசதியளிப்பதற்காக "சிறிய உற்பத்தயாளர்-பெரிய ஏற்றுமதியாளர்" என்ற வெளி வளர்ப்பாளர் மாதிரியைப் பின்பற்றுவதற்கு ஊக்கமளித்தல்
- உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய், சோழம், சோயா ஆகிய ஐந்து பாரிய உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடிப்படையாகக் கொண்டு, தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்கு வசதியளித்தல்
- உயர் தொழில்நுட்ப நீர்ப்பாசன முறைகள், உற்பத்தியை ஊக்குவிக்கும் விவசாயத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை ஊக்குவித்துப் பிரயோகித்தல்
- பண்ணை இயந்திரமயமாக்கல் முறைகளை ஊக்குவிப்பதுடன், அதற்குரிய இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் சுங்கத் தீர்வை மற்றும் ஏனைய இறக்குமதி வரிகளைக் குறைப்பதனூடாக இதனைச் செய்தல்

(ii) பாற்பண்ணைத் தொழில்

- தொழில் முயற்சியாளர் என்ற வகையில் செயற்படும் சுயதொழில் பாற்பண்ணையாளர்களுக்கு அதிக பால் உற்பத்தியைத் தரக்கூடிய பசுக்களை வழங்குதல்
- பாற்பண்ணை அபிவிருத்தி வலயங்களைத் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து மாவட்டங்களில் அரச, தனியார் பங்கேற்பினூடாகத் தாபித்தல்
- பாற்பண்ணையாளருக்கு இடைவெளி நிரப்பும் நிதி வசதிக் கடன்களை சலுகை வீத அடிப்படையில் வங்கிகளினூடாக வழங்குதல்

(iii) உள்நாட்டு மீன்பிடி

- உள்நாட்டு மீன்பிடித் தொழிலை ஊக்குவிப்பதற்காக ஒன்றிணைக்கப்பட்ட உள்நாட்டு மீன்பிடிக் கிராமங்களைத் தாபித்தல்
- தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபையின் உதவியுடன், வர்த்தகமயமான உள்நாட்டு மீன்பிடித் தொழிலை ஊக்குவிப்பதற்காக தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
- வேறு துறைகளுடனான சேர்ப்பை வழங்கும் வெளியார் வளர்ப்பு முறைமையைப் பயன்படுத்தி அலங்கார மீன் உற்பத்தித் தொழிலை ஊக்குவித்தல்

(iv) கல்வி

- உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ஆசிரியர் பயிற்சி, பாடத்திட்ட அபிவிருத்தி, விஞ்ஞான தொழில்நுட்ப அடிப்படையிலான கல்வி ஆகியவற்றுக்கு மேலும் நிதிகள் வழங்கப்படுதல்
- கிராமப் பாடசாலைகளுக்கான வகுப்பறைகள், ஆய்வுகூட உபகரணங்கள், தளபாடங்கள் போன்ற அடிப்படை வசதிகளைப் பெறுவதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல்
- கைக்கணனி மற்றும் கணனிகள் போன்ற நவீன கற்கும் உபகரணங்களைக் கொண்டுள்ள "ஸ்மார்ட் வகுப்பறை" என்ற எண்ணக்கருவினூடாக பாடசாலைப் பிள்ளைகளுக்கான சூழலை உருவாக்குதல்
- பெருந்தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகளது கல்வியை மேம்படுத்துவதற்காக பெருந்தோட்டப் பாடசாலைகளை உரிய வசதிகளுடன் உயர்த்துதல்
- மாற்றுத் திறனுடைய சிறுவர்களுக்கு உதவுவதற்காக தகவல் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி விசேட முறைசாராக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதல்

- நாடு தழுவிய ரீதியில் 5 – 19 வயதுக்கிடைப்பட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கான காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகஞ் செய்தல்

(v) சுகாதாரம்

- பிரதானமாக வார்ட்டுகள், சத்திரசிகிச்சை அறைகள், ஆய்வுகூடங்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட வைத்தியசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்
- தொற்றா நோய்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கு சுகாதார அதிகாரிகள் ஊடாக பாடசாலைப் பிள்ளைகளுக்கு தொற்றா நோய்கள் பற்றிய அறிவூட்டலை மேற்கொள்ளுதல்
- வேகமாகப் பரவும் சிறுநீரக நோய் மற்றும் தொற்றா நோய்கள் பற்றிய ஆய்வு நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல்
- சிசு மரணத்தைக் குறைப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் விசேட சிறுவர் வைத்தியப் பிரிவுகளைத் தாபித்தல்
- தொலை- மருத்துவ நிகழ்ச்சித்திட்டங்களைத் தாபிப்பதனூடாக சுகாதாரப் பராமரிப்பில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்
- நாட்டில் சுகாதார மற்றும் போஷணை அலுவலர்களது தட்டுப்பாடு நிலவுவதால், அவர்களது எண்ணிக்கையை அதிகரித்தல்
- அரசாங்க வைத்தியசாலைகளில் தனியார்துறையால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனை ஆய்வுகூடங்களை நிறுவுதல்
- ஆயுர்வேத மருத்துவத்துறையில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

(vi) சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்

- அரசாங்க பிணைப்பொறுப்பற்ற நிதியீட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் உத்தரவாதத் திட்டத்தைப் பலப்படுத்துதல்
- அரசாங்கத்தினால் 50% வட்டியை மானியமாக வழங்கும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு சலுகைக் கடன் வசதிகளை வழங்குதல்
- புடைவை மற்றும் கைத்தறித் தொழிற்துறையை மீளமைப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவிகளினூடாக அவசியமான உட்கட்டமைப்பு மற்றும் பயிற்சி வசதிகளை வழங்குதல்
- பாரிய பணப்புரள்வுப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் உள்நாட்டுக் கைவினைக்கலைஞர்களின் சந்தை வசதிகளை மேம்படுத்துதல்

(vii) சுற்றுலாத்துறை

- அவசியமான உட்கட்டமைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்புகளை வழங்குவதன் மூலம் சுற்றுலாக் கைத்தொழிலில் முதலீடு செய்வதற்காக தனியார்துறையினரை ஊக்குவித்தல்
- ஹோட்டல்களிலுள்ள வசதிகளை உயர்த்துவதற்கு கடன்களை வழங்கி, கடன் வட்டிக்கு மானியங்களை வழங்குவதனூடாக ஹோட்டல் உரிமையாளர்களுக்கு உதவுதல்
- சுற்றுலா அபிவிருத்தி நிதியைப் பயன்படுத்தி, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களில் கலாசாரக் காட்சிகளை ஒழுங்குசெய்தல்
- உள்ளூர்ப் பொருளாதாரத்தில் பெறுமதிச் சங்கிலிகளை உருவாக்குவதற்காக சுற்றுலாக் கைத்தொழிலில் உள்ளூர் உற்பத்திகளின் பயன்பாட்டை ஊக்குவித்தல்
- தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் அரச, தனியார் பங்கேற்பினூடாக MICE கண்காட்சி நிலையங்களை உருவாக்குதல்

- கிழக்குக் கரையோரப் பகுதியில் உள்ளூர் கைவினைப் பொருட்களைப் பிரபல்யப்படுத்துவதற்காக தகவல் நிலையமொன்றையும் பயிற்சி நிலையமொன்றையும் உருவாக்குதல்

(viii) கிராமிய அபிவிருத்தி (கிராமத்தினூடாக நாட்டைக் கட்டியெழுப்புவோம்)

- பணவீக்கத்துடன் தொடர்புபட்ட வகையில் தமது சோலைவரிகளை மீளமைப்பதனூடாக உள்ளூராட்சி அதிகாரசபைகள் தமது வருமானத்தை உயர்த்துவதனூடாக, தமது பிரதேசங்களில் அடிப்படைச் சேவைகளை மேம்படுத்துதல்
- அரச, தனியார் பங்கேற்பினூடாக உள்ளூராட்சி அதிகாரசபைகள் தமது கழிவகற்றல் முறைமையினை வர்த்தகரீதியாக நடைமுறைப்படுத்தல்
- மக்களது சமூக நலன்களை மேம்படுத்துவதற்காகவும் கிராமியப் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவும் கிராமிய வீதிகளைப் புனரமைத்தல்
- சிறிய குளங்களை புனரமைத்தல், மீளமைத்தல் மற்றும் தூர் எடுத்தல்
- கிராமியத் துப்புரவு வசதிகளை, விவசாய அடிப்படையிலான கைத்தொழில்களை, விவசாய ஆதாரச் சேவைகளை மேம்படுத்துதல்
- உள்ளூர்த் தலைமைகளை சக்தியூட்டுவதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் விசேட நிதியமொன்றைத் தாபித்தல். இது கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குக் கடன் வசதியை வழங்கும்.

## 04. துறைசார் வழிகாட்டல்கள்

### 4.1 சமூக உட்கட்டமைப்பு

**கல்வி**

கல்வித்துறையிலான முதலீடுகள் தேசிய மற்றும் சர்வதேசச் சவால்களை வெற்றிகரமாக எதிர்நோக்குவதன் பொருட்டு, நாட்டின் மனிதவளத்தை மேம்படுத்துதலை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். எல்லா உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும்போதும், ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதனூடாகவும், உரிய உபகரணங்களை வழங்குவதனூடாகவும் கல்வியின் தரங்களில் முக்கிய கவனஞ் செலுத்தப்பட வேண்டும். இச் செயற்பாட்டில், தரங்கள் குறைவாகக் காணப்படுகின்ற கிராமியப் பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் அவசியமானதாகும்.

**மேற்கத்தைய மருத்துவம்**

சுகாதாரத் துறையின் கீழான செயற்றிட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் நோய்த்தடுப்பு முறைக்கு அதிக கவனத்தை வழங்குவதனூடாக சுகாதார சேவைகளின் தரத்தை உயர்த்துவதில் கவனஞ் செலுத்த வேண்டும். எல்லா வைத்தியசாலைகளிலும் பயிற்றப்பட்ட பதவியணியினர் இருப்பதை உறுதிப்படுத்தும் அதேவேளை, சுகாதாரச் சுட்டிகள் எதிர்பார்க்கப்படும் தரத்தில் இல்லாத கிராமியப் பிரதேசங்களுக்கு விசேட அவதானஞ் செலுத்தப்படுவதன் ஊடாக, தேவைப்படும் உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். தொற்றும் மற்றும் தொற்றா நோய்களின் தடுப்பு நடவடிக்கைகள், நோயாளிகளுக்கு வசதியான சேவைகளை வழங்குதல், சிறந்த சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு மக்களைத் தூண்டுதல் ஆகியன, நாட்டில் இறப்பு வீதம் மற்றும் நோயுற்ற வீதம் ஆகியவற்றிலுள்ள பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழிப்பதற்கு மிகவும் முக்கியமானவை.

**உள்நாட்டு மருத்துவம்**

எழுத்தில் இல்லாத பாரம்பரிய மருத்துவ முறைகளை எதிர்காலச் சந்ததியினரின் பயன்பாட்டிற்காக, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பாரம்பரிய மருத்துவர்களின் சேவைகள் ஆக்கபூர்வமான வகையில் சமூகத்திற்குக் கிடைப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். உள்ளூர் மட்ட மருந்து உற்பத்திக்கு வசதி செய்வதற்காக, பாரம்பரிய மருத்துவத் தாவரங்களின் தோட்டங்களை பொருத்தமான இடங்களில் அமைப்பது மிகவும் முக்கியமானதாகும்.

**விளையாட்டு**

விளையாட்டு வீரர்களுக்கு அவர்களை மாகாண, தேசிய, சர்வதேச மட்டங்களுக்கு அனுப்பும் நோக்கில் ஆதரவளிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செயற்பாடுகளில் ஈடுபடுவதனூடாக, மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கைமுறையைப் பேணுவதற்கு உரிய வசதிகள் வழங்கப்பட வேண்டும். தொற்றா நோய்களைத் தடுக்கும் வகையில் உடற்பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது உகந்ததென இங்கு குறிப்பிடப்படுகிறது.

**நன்நடத்தையும் சிறுவர் பாதுகாப்பும்**

நிறுவனமயப்படுத்தலினூடாகவும் நற்பிரஜைகளாகச் சமூகத்துடன் இணைப்பதனூடாகவும், சமூகத்திலிருந்து விலக்கப்பட்ட சிறுவருக்கு மறுவாழ்வளிப்பதற்காக நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். நன்நடத்தையின் கீழுள்ள சிறுவரது, உரிமைகள் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட நாளாந்தத் தேவைகள் மற்றும் நலன்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். சிறுவரது உடல் மற்றும் மனவள அபிவிருத்தி, பாதிக்கப்பட்ட சிறுவரைச் சமூகத்துடன் இணைத்தல், அவர்களது அறிவையும் திறன்களையும் விருத்தி செயதல், அவர்களைப் பெற்றோரிடம் அல்லது உறவினரிடம் அல்லது பாதுகாவலரிடம் கையளித்தல் போன்றன முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பிரதான நடவடிக்கைகளாகும்.

**சமூக சேவைகள்**

நோயுற்றவர்கள், வயதானவர்கள், இயலாதவர்கள் மற்றும் அநாதைகள் போன்ற பாதிக்கப்பட்ட ஆட்களது நலன்களை உறுதிப்படுத்துவதற்கான, சமூக சேவைகளுக்கான மூலதன ஒதுக்கீடுகள் தரப்பட்டுள்ளன. மாகாண அதிகாரிகள் ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்திற்கிணங்கவும், நாட்டின் விதிகள் மற்றும் உபவிதிகளுக்கமைவாகவும், வயோதிபர்களுக்கான இல்லங்களை அமைத்துப் பேணுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சமூகத்தில் தமது சொந்த வீடுகளில் வயோதிபர்கள் பராமரிக்கப்படுவதை ஊக்கப்படுத்துவதற்கான உபாயங்களும் நடைமுறைகளும் பின்பற்றப்படுதல் முக்கியமானது. சமூகத்தில் பாதிக்கப்பட்டோருக்கு அவர்களது சமூக அந்தஸ்தைப் பேணுவதற்காக, சுயதொழில் வாய்ப்புக்களை அறிமுகப்படுத்துதலும் தேவைப்படுகிறது.

**கலாசார மற்றும் சமய விவகாரங்கள்**

எதிர்காலச் சந்ததியினருக்காக, எமது கலாசார பண்பாடுகளைப் பேணுவதற்கு உதவக்கூடிய செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். செயற்றிட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரிக்கும்போது, தொட்டுணரக்கூடிய

*மற்றும் தொட்டுணர முடியாத கலாசாரச் சொத்துக்கள் குறித்து கவனத்திற் கொள்ளப்படுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.*

***வீடமைப்பு***

*வருமானம் குறைந்த மற்றும் தேவையான குடும்பங்களுக்கு பாதுகாப்பான தங்குமிடங்களை வழங்குவதற்காக வீடமைப்பு நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களில் மானியங்கள் வழங்கப்படும்போது, அவர்களது பங்களிப்பும் ஊக்குவிக்கப்பட வேண்டும். மேலும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்பு சலுகைக் கடன்கள் வீடமைப்புக் கடன்களை வழங்கும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வழங்கப்படலாம்.*

***கூட்டுறவுச் சங்கங்கள்***

*கூட்டுறவு அமைப்புகளை அபிவிருத்தி செய்வதில் அவதானஞ் செலுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும், கூட்டுறவு அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கும் பதவியணியினருக்கும் பயிற்சிகளை வழங்குதல், அவற்றை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுக்கும் இந்த நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் கூட்டுறவு அமைப்புகளுக்கு நேரடி மானியங்களாக இந்த நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படலாகாது.*

## 4.2 பொருளாதார உட்கட்டமைப்பு

**மாகாண பாதைகள்**

புதிய பாதைகளை அமைத்தல், தற்போதுள்ள பாதைகளை அபிவிருத்தி செய்தல், பொருத்தமான பாதைக் கட்டமைப்பு பராமரிப்புச் செயற்பாடுகளை விரிவுபடுத்தல் என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். முாகாணப் பாதைகளின் அபிவிருத்தியில் தேசிய பாதை கட்டமைப்புடனான தொடர்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் மாகாண கிராமிய மட்டங்களிலுள்ள உற்கத்தியாளர் மற்றும் சந்தை என்பவற்றுக்கிடையில் ஒரு சிறந்த தொடர்பினை உருவாக்குதல் இன்றியமையாததாகும். கழிவுநீரகற்றல் கட்டமைப்பு மற்றும் ஏனைய தொடர்பான கட்டமைப்புகளுக்கும் அதிக கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும்.

**மலையக உட்கட்டமைப்பு**

மலையகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களது சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புக்களை வழங்கும் வகையில் நிதி பயன்படுத்தப்படுதல் வேண்டும் (உதாரணம்:- கழிவகற்றல் வசதிகள், பாதுகாப்பான குடிசீர் வசதிகள், மலைநாட்டின் பாதைகள், ……..). மலையக சமூகத்தில் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக தேசிய செயற்றிட்டம் (2016 – 2020) ஒன்றின் மூலம் கருத் திட்டங்களை தீர்மானிப்பதற்று சிபார்சு செய்யப்படுகிறது.

**போக்குவரத்து**

இலங்கை போக்குவரத்துச் சபையினால் பராமரிக்கப்படாத பஸ்தரிப்புகளை அமைத்தலும், புனர்நிர்மாணம் செய்தலும் விடயத்தில் கூடுதல் கவனஞ் செலுத்தப்கபடல் வேண்டும். இதற்காக இச் செயற்பாடுகளுக்கு ஒழுங்கமைந்ததொரு தொடர்பாடல் இலங்கை போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்பவற்றுடன் மேற்கொள்ளப்பட வேணடும் என்பதுடன்

இதன்போது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தப்படல் அவசியம். இதன்போது மா.கு.அ.கொ நிதி வர்த்தகம் சார் நடவடிக்கைகளான பஸ் தரிப்பு நிலையங்களில் கடைத் தொகுதிகளையோ, சிற்றுண்டி சாலைகள்லோ அமைப்பதற்றுப் பயன்படுத்தப்படல் கூடாது. பேருந்து நிலையங்களையும் தரிப்பிடங்களையும் அமைக்கும் போது பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட தளவரைவு பயன்படுத்தப்படல் வேண்டும்.

**காணி**

சுற்றுச்சூழல் பாதிப்புறுவதை குறைப்பதற்காக நீர் நிலைகள் மற்றும் மண் பாதுகாப்பில் கூடிய கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். மேலும் பொருத்தமான சட்டங்களை இயற்றுவதற்கும், அரச காணிகளை அலுவலகத் தேவைகளுக்காக ஒதுக்குதல் மற்றும் மாகாண மட்டத்தில் காணி வங்கிகளை நடாத்துதல் என்பனவற்றுக்கு நிதி பயன்படுத்தப்படல் அவசியமாகலாம்.

**விவசாயம்**

விவசாயத் துறையின் கீழ் இனங்காணப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதை ஊக்குவிக்கும் அதேவேளை உற்பத்தி அதிகரப்பு, வினைத்திறன், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கை என்பவற்றுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், விவசாயம் சார்ந்த.ஃ. பெறுமதி சேர்க்கப்பட்ட தொழில் துறையை விருத்தி செய்தல், கைவிடப்பட்ட நெல்வயல்களில் மாற்று பயிர்களை அறிமுகப்படுத்தல், விவசாய பாதைகளை புனரமைத்தலும் பராமரித்தலும் மற்றும் மாகாண விவசாய பண்ணைகளையும் பயிற்சி நிலையங்களையும் நவீனமயப்படுத்தல் என்பனவற்றுக்கு விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். ஊள்நாட்டு மற்றும் சர்வதேச தேவைகளுக்கு ஏற்ற வகையில் விநியோகச் சங்கிலி அபிவிருத்தியின் பால் விசேட கவனஞ் செலுத்தப்படுதல் இன்றியமையாததாகும்.

**கால்நடை**

மாகாணங்களில் பால் விநியோகம், முட்டைகள் மற்றும் இறைச்சி விநியோகங்களை மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பாக வினைத்திறனான கால்நடை வைத்திய சேவைகளை பண்ணைகளுக்கு வழங்குதல், சிறிய மற்றும் நடுத்தர கால்நடை வர்த்தக பண்ணைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பால் சேகரிப்பு மற்றும் களஞ்கியப்படுத்தல் தேவைகளைப் பூர்த்தி செயவதற்கு வசதியேற்படுத்திக் கொடுத்தல், செயற்கைக் கருவூட்டலினூடாக கலப்பு விலங்குகளை உருவாக்குவதனை ஊக்குவித்தல் என்பனவற்றுக்கு விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். உணவு வர்த்தகத் துறையானது துறைசார்ந்த உற்பத்திகளை தொடர்புபடுத்துவதற்கு ஒரு சிறந்த அம்சமாகும்.

**உள்ளுர் மீன் வளர்ப்பு**

மீன் உற்பத்தியை அதிகரித்தல், சந்தை வசதி வாய்ப்புக்களை மேம்படுத்தல், அலங்கார மீன் வளர்ப்பை ஊக்குவித்தல் என்பனவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். மீனவர்களுக்கு அவசியமான தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை யேுஞனுயு உதவியுடன் மேற்கொள்ளல் மற்றும் மீன்பிடி சமூகத்தை வலுப்படுத்துதல் என்பன அவர்களது செயற்பாடுகளைத் திறம்பட முகாமைத்துவம் செய்வதற்கு மிகவும் அவசியமாகும். உள்நாட்டு மீன்பிடித் தொழில்துறையை பெறுமதி சேர் தரத்திற்கு உயர்த்துவதற்கு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மேலும் மீன்பிடி சமூகத்திற்கு மீன்பிடிப்பதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல் மிக அவசியமாகும்.

**நீர்ப்பாசனம்**

விவசாய நிலங்களுக்கு போதிய நீர்ப்பாசன வசதிகளை வழங்குதல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். தற்போதுள்ள நீர்ப்பாசன கட்டமைப்பினை பராமரித்தல், புதிய நீர்ப்பாசன கட்டமைப்புகளை உருவாக்குதல், ஒழுங்கு முறையான நீர் முகாமைத்துவம், விவசாய அமைப்புகளின் அதியுச்ச பங்குபற்றுதலை பெறுதல் என்பன இச் செயற்பாடுகளின் அத்தியாவசிய அம்சங்களாகும். மிகவும் சிறப்பான நீர் முகாமைத்துவ செயற்பாடுகளினூடாக நெல் வயல்களுக்கு மேலதிகமாக ஏனைய துறைசார் பயிர்களுக்கும் நீர் வழங்கல் செய்யப்படல் வேண்டும். வினைத்திறனான நீர் முகாமைத்துவம் சம்பந்தமாக விவசாயிகளுக்குப் பொருத்தமான அறிவூட்டல் நகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும்.

**கிராம அபிவிருத்தி**

கிராமிய பாதை அபிவிருத்தி, சிறிய பாலங்கள், மதகுகள், கிராமிய சந்தை வசதிகள், மயானங்கள், வாசிக சாலைகள் மற்றும் சமுதாய நீர் வழங்கல் திட்டங்கள் என்பனவற்றிற்கு நிதி வழங்கப்படல் வேண்டும். கருத்திட்டங்கள் தயாரிப்பதற்கும் அதனை செயற்படுத்துவதற்கும் தேசிய மட்டத்திலுள்ள நிறுவனங்களுடன் ஒரு சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணுதல் அவசியமாகும்.புதிய தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கும் சந்தை வாய்ப்புக்களை இனங்காண்பதற்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து செயலாற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

**கிராமியக் கைத்தொழில்கள்**

சந்தை தொடர்பு மற்றும் புதிய தொழில்நுட்பத்தினை செயற்படுத்துவதுடன் பாரம்பரிய உற்பத்திகள் மற்றும் தரமான பொருட்களை ஊக்குவித்தல் அவசியமானதாகும். வர்த்தக சம்மேளனம், மத்திய வங்கியின் பிராந்திய கிளைகள், கிராமிய வங்கிகள், தேசிய கைப்பணி சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் கூட்டு ஒருங்கிணைப்பு இத்துறையின் அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும். வியாபார முயற்சிகளில் தனியார் துறையின் பங்களிப்பு அதிக வினைத்திறனை பெறுவதற்காக ஊக்குவிக்கப்படுகிறது. சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படும் பயிற்சிகளுக்காக சான்றிதழ்கள் தேசிய தொழில்பயிற்சி (ஏஙே) தராதரத்துடன் வழங்கப்படவேண்டும்.

**கிராமிய மின்னிணைப்புகள்**

தேசிய வலையமைப்புகளிலிருச்து கிராமிய மட்ட விஸ்தரிப்பிற்கோ அல்லது அவ்வாறு செய்ய முடியாத இடங்களில் பொருத்தமான மாற்று சக்தி வழங்கல் திட்டங்களுக்கோ நிதியானது உபயோகிக்கப்படலாம். எனினும் இந் நிதியானது பொது விஸ்தரிப்பிற்கேயன்றி தனிப்பட்ட விஸடதரிப்புகளுககு யன்படுத்தப்படல்காது.

**உல்லாசப் பிரயாணத் துறை**

உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் மற்றும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான கருத்திட்டங்களை இனங்காண்பதற்கு இம் முதலீடானது பயன்படுத்தப்படல் வேண்டும். ஊல்லாசப் பயணிகளைக் கவரும் இடங்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படுவதுடன் அவற்றின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தனியார் துறையிடம் வழங்கப்படல் வேண்டும் (சிற்றுண்டிக் சாலைகள், கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள், கடல் குளிப்பு இடங்களுக்கருகில் நன்னீர் குளிப்பு வசதிகள் போன்றன). மாகாண சபைகளானது தொழில் முயற்கியாளர்களின் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு ஊக்கமளிக்கும் அதேவேளை துனியார் துறையின் பங்களிப்புடன் தற்போதுள்ள சந்தை வசதிகளை நவீனமயப்படுத்தி அவர்களுக்கு வழங்குதல்

வேண்டும். மாகாணங்களுக்கே உரித்தான உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இடங்களை இனங்கண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை அறிவுறுத்துதல் அவசியமாகும் (சுற்றுச் சூழல், சாகசம், விவசாய அடிப்படையிலானவை, கலாச்சாரம் போன்ற வகையான துறைகள்)

**உள்ளூராட்சிச் சபைகள்**

- **உள்ளூராட்சி பாதைகள்**

  உள்ளூராட்சி சபைகளின் பாதைகளின் இயங்குநிலை மற்றும் பராமரிப்பு விடயங்களில் முக்கிய கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். சுந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ பாதைகளை கொங்கிறீட்டு அல்லது தார் இடுவதன் மூலம் உள்ளூராட்சி வீதிகளின் இயங்கு வினைத்திறன் நிரந்தரமாக்கப்படல் வேண்டும். இந் நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகள் உள்ளூராட்சி ஆணையாளரினால் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும்.

- **சமூதாயத்திற்கான நீர்வழங்கல்**

  இந்நிதியின் மூலம் பாதுகாப்பான குடிநீர் வசதிகள் மற்றும் கழிவகற்றல் வசதிகள் செய்துகொடுக்கப்படல் வேண்டும். நீர் வழங்கலின் போது நீரின் தரமானது தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பொதுக் கிணறுகள் மற்றும் குளிக்கும் இடங்களை ஒழுங்குமுறையாகப் பராமரித்தல் அவசியமாகும். மேலும் அவற்றை சுகாதாரமாக வைத்திருத்தலும் அவசியமாகும்.

- **கழிவு முகாமைத்துவம்**

  கழிவு மீள்சுழற்சி, கூட்டுப்பசளை தயாரித்தல் மற்றும் கழிவிலீருந்து பொருளாதார ரீதியில் பெறுமதி மிக்க பொருட்களை தயாரித்தல் போன்சனவற்றிற்கு முக்கியத்துவமளித்தல் அவசியமானதாகும். கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே வேறுபிரிப்பதற்கு ஏற்றவகையில் பொது மக்களை அறிவுறுத்துதல் வேண்டும்.

- **ஏனைய உள்ளூராட்சிச் சேவைகள்**

  மேலே விபரிக்கப்பட்ட உப பிரிவுகளில் அடங்காத உள்ளூராட்சிச் சேவைகளும் உள்வாங்கப்படலாம்.

**பின்தங்கிய மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களின் அபிவிருத்தி**

மாகாண அதிகார அலகுகள் பின்தங்கிய கிராமங்களை இனங்கண்டு அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் ஏனை கிராமங்கள் மற்றும் நகரங்களுடன் இணைத்து ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தியை மேற்கொள்ளல் வேண்டும். சிறிய பாலங்கள், கிராமிய வீதிகள், பாதுகாப்பான குடிநீர் வசதிகள் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளில் காணப்படும் பற்றாக்குறையினால் கிராமங்களில் வாழும் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதன்கீழ் இனங்காணப்படும் கருத்திட்டங்கள் இப் பாதகமான நிலைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அமைதல் வேண்டும்.

**நெகிழ் தன்மையான ஒதுக்கீடுகள்**

இதன்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியானது ஆரம்பத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத அவசர தேவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம்.

**05. பொது அறிவுறுத்தல்கள்**

i. பிரதான துறைகளிற்கு மூலோபாய திட்டங்களை உருவாக்குவதன் மூலம் பாதகமான அபிவிருத்தி செயற்பாடுகளைத் தவிர்க்கலாம்.

ii. வுளங்களின் வலையமைப்பு செயன்முறையை பல்துறை சார்ந்து உருவாக்குவதன் மூலம் பிரதேச மற்றும் அமைவிட அனுகூலங்களை இணைத்துக் கொள்ளலாம்

iii. பூச்சிய வரவுசெலவுத்திட்ட கொள்கைக்கமைவாக 2017 ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள்.ஃ. திட்டங்களைப் பூரணப்படுத்துவதற்குத் தேவையான சகல முயற்சிகளையும் மாகாணசபை எடுத்தல் வேண்டும்.

iv. கோள்வனவு நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தகாரர்களை தெரிவுசெய்யும் போது அரச கொள்வனவு நடைமுறைகளை பின்பற்றுதல் மாகாண அதிகார அலகுகளின் பொறுப்பாகும்.

v. நிதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் நிகழ்ச்சித் திட்டம்.ஃ. கருத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்துவதன் மூலம் நிதியின் உச்ச பயன்பாட்டை உறுதிப்படுத்தல் வேண்டும்.

vi. ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கருத்திட்டங்கள் காணப்படின் அவை சரியான முறையில் பிரிக்கப்பட்டு தொடரும் வருடங்களுக்கான நிதிகளும் குற்ப்பிடப்படல் வேண்டும்.

vii. உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களுக்கு செலவு - பயன் பகுப்பாய்வு பயன்படுத்தப்படல் வேண்டும். சமூக உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களுக்கு செலவு - திறன் கொள்கை பயன்படுத்தப்படல் வேண்டும்.

viii. ஒரு கருத்திட்டத்தை செயற்படுத்தத்தொடங்குவதற்கு முன் அதன் பொருத்தப்பாடு, தரம், தரநிர்ணயம், பராமரிப்பு என்பன கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

ix. தரைத்தோற்றம் மற்றும் பிரதேசத்தின் காலநிலைக்கேற்ற மாதிரிப் படங்கள் மாறினாலன்றி அரசாங்கக் கட்டடங்கள் முடியுமான வரைபடத்திற்கேற்ப (type plan) அமைக்கப்படல் வேண்டும்.

x. கட்டட மற்றும் ஏனைய கட்டுமான செயற்பாடுகளில் உச்ச இடப் பயன்பாடும் தேவையற்ற கட்டுமானங்களை தவிர்த்தலுத் கவாத்தில் கொள்ளப்படல் ஆவண்தும்

xi. பங்குதாரர்களிடமிருந்தான (உள்ளூராட்சிச் சபைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக நலன்புரி போன்றன ) நிதி வளங்கல்களுக்கான சாத்திப்பாடுகள் இருப்பின் அவையும் கவனத்தில் கொள்ளப்படுவதன் மூலம் அரச வரவுசெலவுத் விட்டத்தின் மீதான தாக்கத்தைக் குறைக்கல். வேண்டும்.

xii. வர்த்தக பெறுமதியுடைய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது தனியார் பங்களிப்பை பொருத்தமான முறைகளினூடாக *(உ+ம் PPP)* பெறுதல் அவசியமாகும்.

xiii. செயல்திட்டங்கள் அல்லது கருத்திட்டங்களைத் தெரிவு செய்யும் போது பின்தங்கிய அல்லது தனிமைப்படுத்தப்பட்ட இடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

xiv. மீள்வருகை மற்றும் ஒன்றிலொன்று பொருந்துதல் போன்ற விடயங்கனை தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

xv. 09-03-2016 அன்று நடந்த அமைச்சரவை அமைச்சர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கிராமியப் பொருளாதார அபிவிருத்தி செயல்திட்டங்களில் 25% பெண்களைச் சென்றடைதல் வேண்டும்.

xvi. மீள்தன்மையான ஒதுக்கீடுகளில் கீழ் உள்ள நிதி நியாயமான வகையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

2017 ஆம் ஆண்டுக்கான 3 மற்றும் 3a படிவங்களை பூர்த்தி செய்து 31-01- 2017 இற்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலே கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படவேண்டும் என்பதுடன் விபரங்களுக்கு செயலாளர், நீதி ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளவும்.

இவ் அறிவுறுத்தல்களை மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களஇ நிறுவனத் தலைவர்கள். ஆகியோரிற்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்களுடைய ஒத்துழைப்பைப் பெரிதும் மதிக்கின்றேன்

ஒப்பம்

A.T.M.U.D.B. தென்னகோன்,

செயலாளர்

நிதி ஆணைக்குழு.

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி செயலகம்:- தகவலுக்காக
2. பிரதம மந்திரியின் செயலாளர், பிரதமர் அலுவலகம்:- தகவலுக்காக
3. செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
4. செயலாளர், நிதி அமைச்சு:- தகவலுக்காக
5. செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் :- தகவலுக்காக
6. கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வுத் திணைக்களம் - தகவலுக்காக
7. திறைசேரி பிரதி செயலாளர், தகவலுக்காக
8. பணிப்பாளர் நாயகம், தேசிய திறைசேரி - தகவலுக்காக
9. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - தகவலுக்காக
10. பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்), அனைத்து மாகாணங்கள்- தேவையான நடவடிக்கைகளுக்காக
11. பிரதிப் பிரதம செயலாளர் (நிதி), அனைத்து மாகாணங்கள்- தேவையான நடவடிக்கைகளுக்காக
12. உதவி கணக்காய்வாளர் நாயகம், அனைத்து மாகாணங்கள்- தேவையான நடவடிக்கைகளுக்காக